(ஈ) பெண்களுக்குத் தனிச் சிறை அமைத்து, சிறைச்சாலைகளில் கட்டமைப்பு வசதிகள் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகளை சிறையில் அடைத்து, எதிர்காலத்தில் குற்றம் இழைக்காதவண்ணம் சீர்திருத்தி, அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கும் புனிதமான பணியை மேற்கொண்டு வரும் சிறைத் துறைப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், சிறைவாசிகள் நலன் மற்றும் மறுவாழ்வினைக் கருத்தில் கொண்டும், பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. தற்போது, சென்னை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே பெண்களுக்கு தனிச் சிறைகள் இருப்பதால், பெண் சிறைவாசிகள் தங்களுடைய சொந்த மாவட்டத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சிறைவாசி 350 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருச்சி சிறையில் அனுமதிக்கப்படுகின்றார். இவ்வாறு நீண்ட தூரத்தில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுவதால், சிறைவாசிகளை அவர்களது உறவினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சந்திக்க இயலாத நிலையும், சிறைவாசிகளை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதிலும், மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்த சிரமங்களைத் தவிர்க்கும் வகையில், தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரும் பெண் தண்டனை சிறைவாசிகளைத் தங்க வைப்பதற்காக 30 கோடி ரூபாய் செலவில் முறையே மதுரை மற்றும் கோயம்புத்தூரில் புதியதாக தனிச் சிறைகள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–45

தற்போது தமிழ்நாட்டில் 9 மத்திய சிறைகள், 10 மாவட்டச் சிறைகள் என மொத்தம் 19 மாவட்டங்களில் சிறைகள் உள்ளன. மீதமுள்ள 13 மாவட்டங்களில் மாவட்டச் சிறைகள் அமைக்கப்படுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதல் கட்டமாக திருப்பூர், தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 39 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்டச் சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 மே 10

சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், சிறை வளாகத்தில் பசுமையை மேம்படுத்தும் வகையிலும், சிறைவாசிகளைப் பயனுள்ள வகையில் பணியில் ஈடுபடுத்தும் வகையிலும், மதுரை மத்திய சிறையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தினை புழல் மத்திய சிறை வளாகத்திலும் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை மற்ற சிறைச்சாலைகளிலும் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 6 மத்திய சிறைகள், 2 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம்மூலம் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மரபு முறையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத் தேவையைக் குறைத்திடவும், சிறையின் மின் தேவையை மரபுசாரா எரிசக்தியின்மூலம் பூர்த்தி செய்யும் வகையிலும், மேற்கூரை சூரிய ஒளி உற்பத்தி முறை, அதாவது Rooftop Solar Photo voltaic முறையினை புழல் மத்திய சிறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளிலும் 35 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்புதிய அறிவிப்புகள் சிறைத் துறையை நவீனமயமாக்குவதுடன், சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சிறைவாசிகள். குறிப்பாக பெண் சிறைவாசிகள் நல வாழ்வினை மேம்படுத்தவும் உறுதுணை புரியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)